OS: 302/2018

Date:15.03.2023

பெயர் : சரவணன்

**வாதி தரப்பு சாட்சி 2 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>குறுக்கு விசாரணை - 13 முதல் 15 பிரதிவாதிகள் தரப்பில்</u>**

நான் இவ்வழக்கில் 14வது வாதியாக உள்ளேன். எதற்காக இவ்வழக்கில் அரசு தரப்பினரை கட்சி சேர்த்துள்ளோம் என்றால் ராமாயி அம்மாள் மற்றும் சண்முகம் இருவரும் 1974 மற்றும் 1978 ஆகிய ஆண்டுகளில் போலியான ஆவணங்கள் தயாரித்து பதிவு செய்துள்ளதால் அதற்காக கட்சி சேர்த்துள்ளோம். வழக்குரை நான் படித்து பார்த்துள்ளேன் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வழக்குரையில் நாங்கள் பிரதிவாதிகள் 13 முதல் 15 வரை உள்ள அரசு தரப்பினருக்கு எதிராக எந்த விதமான பரிகாரங்களும் கேட்கவில்லை என்றால் சரிதான். ஆவணங்கள் போலியாக பதிவு செய்யப்பட்டுள்ளதால் சேர்த்துள்ளோம். எந்த ஆவணம் போலியாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அந்த ஆவண எண் எனக்கு தெரியாது, பார்த்தால்தான் தெரியும். அது எந்த தேதியில் ஆவணம் போலியாக பதிவு செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எந்த ஆண்டு தோராயமாக ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்றால் 1974. இந்த வழக்கு எந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது எனது தந்தைதான் அனைத்தும் பார்த்து கொண்டிருந்தார். இந்த வழக்கு 2016 ம் ஆண்டுதான் முதன்முதலாக மேட்டுர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி ஆவணம் பதிவு செய்யப்பட்டு உரிய காலவரைக்குள் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் நாங்கள் வழக்கில் கேட்டுள்ள பரிகாரங்கள் கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணம் எழுதப்பட்டு 38 ஆண்டுகள் பின்னிட்டுதான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் காலவரையரை சட்டத்தால் எந்த ஒரு ஆவணமும் பதிவு செய்யப்பட்ட 3 ஆண்டுகளுக்குள் அதுகுறித்து கேள்வி மற்றும் ஆட்சேபனை செய்யப்படவேண்டும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அ.வ.எண்.28/2011 வழக்கானது வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு அது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அ.வ.எண்.28/2011 வழக்கிலும் இதே எதிர் தரப்பினர்கள் இதே வழக்கின் சூழ்நிலை மற்றும் வழக்குமூலத்தின் அடிப்படையில் இதே சொத்து விவரத்தை கொண்டு தாக்கல்

செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடியானது என்று சொன்னால் அந்த வழக்கை சரியாக பார்க்கவில்லை. மேற்படி அ.வ.எண்.28/2011 வழக்கு எந்த தேதியில் தள்ளுபடியானது என்று எனக்கு தெரியாது. ஏற்கனவே இதே வழக்கின் பரிகாரங்கள் குறித்து அ.வ.எண்.28/2011 வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டதால் அதே வழக்கின் பரிகாரத்தை கொண்டு இவ்வழக்கில் எவ்வித பரிகாரமும் கேட்கமுடியாது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் வழக்குரையில் கோரியுள்ளபடி ஆவணத்தை ரத்து செய்யவேண்டும் என கேட்பது தவறானது என்றும், அது இந்திய பதிவு சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவாவின் சர்வே எண்.3/3 அதன் செக்குபந்தி எனக்கு தெரியாது. உண்மையில் தாவா சொத்து விவரங்கள் எனக்கு தெரியாது என்றும், சொத்து விவரத்தில் நான்கு சர்வே எண்கள் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே தாவா சொத்தை பற்றி எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. எனது தாத்தா பெயரில் இருந்த சர்வே எண் ஒரு எண்ணில் மட்டும் இருந்தது. இந்தவழக்கு ஏற்கனவே மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் இதே வழக்கு மூலத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டதால் முன்தீர்ப்பு தடை கோட்பாட்டின்படி இவ்வழக்கும் தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக வாதிகள் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்பதால் பிரதிவாதிகள் 13 முதல் 15 வரை தாவாவிற்கு அவசியமற்ற தரப்பினர்கள் என்பதால் அவர்களை பொருத்து தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் 13 முதல் 15 வரை பொருத்து வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**:- இல்லை.

ஒப்பம்/- PW2

ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்.